**சுருக்கம்**

பள்ளிக்கல்வி- மேல்நிலைத் தேர்வு மார்ச், 2005-கடலோரப் பகுதியிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 12ம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியர்களின் செய்முறைப் பதிவுரு குறிப்பேடுகள் சுனாமி கடலலைகளால் பாதிக்கப்பட்டது- அவற்றை தயாரித்து அளிப்பதிலிருந்து விலக்கு அளிப்பது குறித்து ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பள்ளிக் கல்வி (மேநிக2) துறை**

அரசாணை (1-டி)
எண்.11 நாள்-17.01.2005

<u>படிக்க</u>

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.129001/ டபிள்யு13/2004 நாள் 31.12.2004

----------

<u>ஆணை</u>

26.12.2004 அன்று 'சுனாமி' என்னும் கடல் அலைகள், கடலோர மாவட்டங்களை தாக்கியதால் கடலோரப்பகுதியிலுள்ள 13 மாவட்டங்களிலுள்ள மேல்நிலைப்பள்ளிகளில் 12ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களின் செய்முறைப் பதிவுரு குறிப்பேடுகள் இந்த சுனாமி கடல் அலைத் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளதாக பெரும்பான்மையான மாவட்டங்களிலிருந்து செய்திகள் பெறப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, எதிர்பாராத இந்த சோக சம்பவத்தால் பதிவுரு குறிப்பேட்டினை இழந்து நிற்கும் மாணவர்களுக்கு மீண்டும் அவற்றைத் தயாரித்து தேர்வு நாட்களில் தேர்வு நடத்தும் ஆசிரியர்களிடம் சமர்ப்பிக்க போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினாலும், அப்படியே அவற்றைத் தயாரிக்கக் கோரினாலும் பிற பாடங்களைப்படிக்க நேரம் போதிய அளவு கிடைக்காது என்பதினாலும் 12ம் வகுப்பு மாணவர்களின் நலன் கருதி சிறப்பு வழக்காக இவ்வாண்டிற்கு மட்டும் அவர்களுக்கு பதிவுரு குறிப்பேடு தயாரித்து

அளிப்பதிலிருந்து முழுமையாக விலக்கு அளித்து அதற்கான மதிப்பெண் 20-ஐ முழுமையாக அவர்களுக்கு வழங்குவதற்கு உரிய ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பத்தி 1 ல் கண்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் ஆய்வுசெய்து கீழ்வரும் ஆணைகளைப் பிறப்பிக்கிறது:-

i) 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி கடலலைத் தாக்குதலால் தமிழக கடலோரப்பகுதிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 12ம் வகுப்பு படித்துக் கொண்டு அரசு பொதுத்தேர்வை எதிர்நோக்கி இருக்கும் மாணவ மாணவியர்கள் சார்பாக அவர்களின் பதிவுரு குறிப்பேடுகள் சுனாமி கடலலையால் பாதிக்கப் பட்டிருப்பின் அவர்கள் சார்பில் மட்டும் பதிவுரு குறிப்பேடு தயாரித்து அளிப்பதிலிருந்து விலக்கு அளித்து அவர்கள் சார்பில் அதற்கான மதிப்பெண் 20-ஐ முழுமையாக வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது,

ii) மேலும் 26.12.2004 அன்று ஏற்பட்ட சுனாமி கடலலைத் தாக்குதலால் தமிழக கடலோரப்பகுதிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் 12ம் வகுப்பு படித்துக் கொண்டு அரசு பொதுத் தேர்வை எதிர்நோக்கி இருக்கும் மாணவ மாணவியர்கள் பதிவுரு குறிப்பேடுகளை ஏற்கனவே தயாரித்து பள்ளியில் வழங்கிய பின்பு அவை நீரில் அடித்துச் செல்லப்பட்டிருப்பின், அம்மாணவ, மாணவியர்கள் சார்பில் அதற்குரிய முழு மதிப்பெண் 20-ஐ வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு.ஞானதேசிகன்,

அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,சென்னை 600 006
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,சென்னை -6
மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் இயக்குநர்,சென்னை 600 006
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் அலுவலகம்
சென்னை-9
வருவாய்த்துறை, சென்னை-9
சிறப்பு ஆணையர், வருவாய் நிர்வாகத்துறை,சென்னை-5

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.